# பொன்விழா

*Golden Jubilee*

## சிறப்பு மலர்

*Special Souvenir*



1962 - 2012

மு/ பாலிநகர் மகா வித்தியாலயம்

வவுனிக்குளம்

# மு/பாலிநகர் மகா வித்தியாலயம்
# Mu/Palinagar Mahavidyalayam

# பொன்விழா சிறப்பு மலர்
# 1962 - 2012

**வெளியீடு**
பழைய மாணவர் சங்கம்,
மு/பாலிநகர் மகாவித்தியாலயம்,
பாலிநகர், வவுனிக்குளம்.

**Old Student's Association**
**Mu/Palinagar Maha Vidyalayam**
**Palinagar, Vavunikkulam**

# பொன்விழா மலர்க்குழு

| | | |
|---|---|---|
| **கௌரவ ஆலோசகர்** | : | திருமதி யோ. தில்லைநாதன் |
| **மலர் ஆசிரியர்கள்** | : | திரு.க. குணசிங்கம்<br>திரு. வ. வசந்தகுமார் |
| **மலர்க் குழு** | : | திருமதி பா. பிறேமச்சந்திரன்<br>திருமதி ம. செல்வநாயகம்<br>திருமதி ப. மனோகரன்<br>திரு. வி. நிவேகீதன்<br>திரு. சி. சத்தியவான்<br>திருமதி ஸ்ரீ. ஜெகராஜன்<br>திருமதி ஸ்ரீ. சாம்பசிவம்<br>செல்வி செ. ஜானகி |

**பாலிநகர் மகா வித்தியாலய சஞ்சிகை :** பொன்விழா சிறப்பு மலர் 2012

**பிரதிகளின் எண்ணிக்கை :**

| | | |
|---|---|---|
| **அச்சுப்பதிப்பு** | : | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>#681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| **நிதி அனுசரணை** | : | பழைய மாணவர் சங்கம். |
| **வெளியீடு** | : | பழைய மாணவர் சங்கம்<br>மு/பாலிநகர் மகாவித்தியாலயம்<br>பாலிநகர்,<br>வவுனிக்குளம். |

# வன்னிப் பிரதேசத்தின் சிறுகைத்தொழில் ஒரு நோக்கு

**1. அறிமுகம்**

இலங்கையின் வடக்கே வடமாகாணத்தில் அமைந்து விளங்கும் வன்னிப் பிரதேசத்தின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை எடுத்து நோக்கினால். 20ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு விவசாயமே முக்கிய தொழிலாகக் கருதப்பட்டது. அத்துடன் சிறுகைத் தொழில்களும் முக்கியமானதாகவே விளங்கின. 1983இல் இருந்து ஏற்பட்ட அமைதியின்மை நிலைமைகளால் கடந்த 30 வருடங்களாக இப்பிரதேசத்தினது பொருளாதார வளர்ச்சியும் வளங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு மனித வளங்களும் சொத்தழிவுகளும் ஏற்பட்டு அழிவுகளையும் சந்தித்தன.

"வந்தாரை வாழவைக்கும் வன்னி" என்பதற்கிணங்க வன்னிப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். வன்னி என்பது காட்டைக் குறிக்கும் வன்னி என்றால் நெருப்பு என்றும் பொருள் உண்டு. நெருப்பைப் போன்றவர்களாக கோபமும், ரோசமும், தன்மானமும் மிக்கவர்களாக வன்னியர் வாழ்ந்ததனால் வன்னிப்பிரதேசம் பண்டார வன்னிய மன்னனின் ஆட்சிக்காலத்தில் அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது.

உலகின் கடைசித் தமிழ் இராட்சியம் வன்னி இராட்சியம் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்டு 1803 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி கப்டன் வொன்டிறிக்பேக்கினால் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்படும் வரை வன்னி இராட்சியம் யாருக்கும் அடிபணியாத அடங்காப் பற்றாக ஒரு தனியரசாகவே திகழ்ந்தது.

இப்பிரதேசத்தில் விவசாயம் மற்றும் கைத்தொழில் போன்றன 1970 களிலிருந்து வளரத் தொடங்கின. அங்கும் இங்குமாகப் பரவிக் கிடந்த வனங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தியமைக்கு இவர்கள் சான்றாக விளங்கினார்கள். இப்பிரதேச மக்கள் கைத்தொழிலின் மீது கொண்டிருந்த இரசனையும், அவர்களது விடா முயற்சியும் இத்துறையினை வளர்க்கத் தொடங்கின.

**2. வரையறை**

கைத்தொழில் துறை என்ற பதமானது ஒரு விரிவான கருதுகோளைக் குறிப்பதாக உள்ளது.

- தயாரிப்புக் கைத்தொழில்
- கல்லுடைத்தல்
- சுரங்கமகழ்தல்
- கட்டட வாக்கம்
- மின்சாரம் நீர் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள்

போன்றவற்றை உள்ளடக்கிய துறையே கைத்தொழில் துறை எனப்படுகின்றது.

தயாரிப்புக் கைத்தொழில் துறை என்பதற்குள் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதி முறைப்படுத்தும் கைத்தொழில்களும் தொழிற்சாலைக் கைத்தொழில்களும் சிறு கைத் தொழில்களும் உள்ளடங்குகின்றன.

கைத்தொழில்களைப் பருமட்டாக மூன்று வகையாக வகைப்பாடு செய்யலாம்.

1. சிறு கைத்தொழில்கள்

2. நடுத்தரக் கைத்தொழில்கள்

3. பாரிய கைத்தொழில்கள்

என்பனவாகும்.

பண்டாரநாயக்கா மற்றும் பெர்ணாண்டோ ஆகியோர் முதலீட்டு மட்டத்தையும் தொழிலாளர் எண்ணிக்கையையும் வைத்து கைத்தொழில்களை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்துள்ளனர்.

| கைத்தொழில் வகைப்பாடு | முதலீட்டு மட்டம் | தொழிலாளர் எண்ணிக்கை. | பங்கு வீதம் |
|---|---|---|---|
| 1. சிறிய கைத்தொழில் | 500,000 ↓ | 20 ↓ | 32% |
| 2. நடுத்தர கைத்தொழில் | 500,000 mil | 20-199 | 50% |
| 3. பாரிய கைத்தொழில் | 5 million ↑ | 200 ↑ | 18% |

இப் பிரதேசத்தில் 1970, 1980களில் கைத்தொழில் துறையானது எழுச்சி பெறத் தொடங்கியது. திறந்த பொருளாதாரக் கொள்கையினைத் தொடர்ந்து இங்கு இறக்குமதி பிரதியீட்டு உத்தி குழந்தைப்பருவத்திலிருந்து உசிதமான ஒரு சூழ்நிலையையும் பாதுகாக்கப்பட்ட சந்தையையும் வழங்கியது. இதனால்

- உயர்ந்த வேலைவாய்ப்பு
- நகரமயமாதல்
- விவசாய நவீனமயமாக்கல்

என்பன நவீனத்துவத்தினை அடைவதற்குப் பங்காற்றியது. இருப்பினும் தொடர்ந்து வந்த உள்நாட்டுக் குழப்பங்களும், யுத்தங்களும் இப் பிரதேசத்தினது கைத்தொழில் உற்பத்தியின் வெளியீட்டின் அளவில் வீழ்ச்சியினை ஏற்படுத்துவதாக அமைந்தது. ஆயினும் திறந்த பொருளாதாரக் கொள்கையானது தொடர்ந்து கைத்தொழில் பொருட்களினது அதிகரித்த வெளியீடானது அப்பொருட்களை வேறு பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதற்கு வழி சமைத்தது. இருப்பினும் தொழில் மற்றும் வருமானம் பாதுகாப்புத் தொடர்பாக நிச்சயமற்ற தன்மைகளையும் உண்டு பண்ணியது.

**3. சிறுகைத்தொழில்கள்**

10 இலட்சம் ரூபாவிற்குக் குறைவான மூலதனத்தினை ஈடுபடுத்தியிருப்பின் அதனையே சிறுகைத் தொழில்கள் என்பர்.

உதாரணம் :- கைத்தறி நெசவு

இங்கு அதிகமான மக்கள் இத்துறைசார் தொழிலில் ஈடுபடுவதனை அவதானிக்க முடிகின்றது.

எந்தவொரு உற்பத்தி நடவடிக் கையும் சந்தையை நோக்கமாகக் கொண்டு முன்வைக்கப்படும் பொருளாதாரம்சார் செயற்பாடு கைத் தொழிலாக்கம் எனப்படும். கைத் தொழில் உற்பத்தி துறையானது பிரசேத மற்றும் தேசிய ரீதியான அதிகாரிகளுக்கும் கூட வழிவகுக் கின்றது.

இங்கு அதிகளவான வளங்களும் காணப்படுகின்றன. இவை

1. மீளப் பெறக் கூடிய வளங்கள்

2. மீளப் பெறமுடியாத வளம்

3. புதுப்பிக்கக் கூடிய வளம்

4. புதுப்பிக்க முடியாத வளம்

எனப்படுகின்றது.

இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டமானது 1237.11 sqkm பரப்பளவினைக் கொண்டு காணப் படுகின்றது. இதில் 1:3 பகுதியானது சிறுகைத்தொழில் நடவடிக்கைகளுக்கென பயன்படுத்தப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டமானது 2616.90 sq.km பரப்பளவினைக் கொண்டு காணப்பட்ட போதிலும் இப் பிரதேசத்து மக்கள் சிறுகைத்தொழில் முயற்சிகளில் அதிக ஆர்வமுள்ள வர்களாக விளங்குகின்றனர்.

இங்கு மிக அதிகளவான மக்கள் காணப்படுகின்றமையும் கைத்தொழில் அதிகரிப்புக்கான ஒரு சாதகமான பங்கினை வழங்குகின்றது. 1987, 1996 2008இன் யுத்தம் என்பன இப்பிர தேசத்தின் தொழில் முயற்சிகளை சீர்குலைத்தது இருப்பினும் மீண்டும் அவை மிளிர்ச்சியடையத் தொடங்கின.

யுத்தங்களினாலும் இடப் பெயர்வு களாலும் பேரிழப்புகளைச் சந்தித்த இப்பிரதேச மக்கள் இத்தொழில் முயற்சியில் அதிகளவாக ஈடுபடுவதற்கான காரணங்களாக:

- குறைந்த மூலதனம் போதியளவாக உள்ளமை
- மரபு ரீதியான அல்லது நடுத்தர தொழிலாகப் பயன்படுத்த முடிகி ன்றமை
- உள்ளூர் மூலதனங்களை உற்பத்திக்கு பயன்படுத்த முடிகின்றமை
- உள்ளூர் சந்தை போதுமானது

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இங்கு தானியம் குற்றும் ஆலைகள், புகையிலை, பதனிடுதல், சுருட்டுத்தொழில், இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல், வெதுப்பக உற்பத்திகள், போத்தலில் அடைத்தல், ஆயுள்வேத மருந்துகள் தயாரித்தல், பால் நுகர்வுப் பொருட்கள் பதனிடுதல், தெங்கு மற்றும் பனை தும்புப் பொருட்கள், படகுகட்டுதல், பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் கட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

யுத்தத்தின் சுவடுகளில் இருந்து மீட்சி பெற்ற நிலையில் காணப்படும் கைத்தொழில் சாலைகளாக பல உருவெடுத்துள்ளன.

- வள்ளிபுனம்- தும்புத்தொழிற்சாலை
- இரணை மடு- படகுகட்டும் தொழில்
- அறிவியல் நகர்- அப்பியாசக் கொப்பி கட்டுதல்
- தொண்டமான் நகர்- மட்பாண்ட உற்பத்தி போன்றவற்றினை எடுத்துக் காட்ட முடியும்.

இப்பிரதேசத்து மக்கள் விவசாயத் துறையினைவிட, அதிகளவாக கைத் தொழில்துறைகளுக்கே இன்று அதிக முக்கியத்துவப்படுத்துவதற்கான காரணங்களாக

- உள்ளூர் மூலவளங்களை உள்ளூரிற் குள்ளேயே பயன்படுத்தப்படுவதனால் பிரதேச அதிகரிப்பை மேம்படும்
- அதிக வேலைவாய்ப்பு கிடைக்கும்

- பொருளாதார வளர்ச்சி ஏற்படும்
- யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் வெளியீடுகள் பாதிக்கப்படுவதில்லை.
- உற்பத்திகளைக் குறுகிய காலத்தில் அதிகரிக்க முடியும்
- சந்தைப்படுத்தல் செலவு குறைவு போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

தற்போது சிறுகைத்தொழில் துறையினை முன்னேற்றுவதில் அரச திட்டங்களும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- கடன் திட்டங்களை வழங்குதல்
- ஆலோசனைகளை வழங்குதல்
- மானியங்களை வழங்குதல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

4.20ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இப்பிரசேத வாசிகள் விவசாயத்தை நம்பியவர்களாகக் காணப்பட்டதுடன் அதனுடன் இணைவான சிறு கைத் தொழில்களும் முக்கியமாக இருந்தன. இக் கால கட்டத்தில் கைத்தொழில் மற்றும் சேவைத் துறையின் மூலமாக வருமானமும் அதிகரிக்கத் தொட ங்கின. 1987- 1927 காலப்பகுதியில் இந்திய அமைதிப்படையினருடனான யுத்தத்தினாலும் இப்பிரதேச பொருளா தார செயற்பாடுகள் பெரிதும் பாதிப்புக்குட்பட்டன.

மக்கள் ஏனைய பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றமையானது அவர்களின் உற்பத்தித்திறன்களையும் வீழ்ச்சியடையச் செய்தது. இதனால் உள்ளூரில் காணப்பட்ட சிறுகைத் தொழில் நிலையங்கள் அழிவிற்கு உள்ளாகின.

உதாரணம்:- அம்பாள்குளம் :- மிச்சர் உற்பத்தி, திருவையாறு - பனைஉற்பதி, வலைப்பாடு - மீன்பதப்படுத்தும் உற்பத்தி என்பன பாதிப்படைந்தன.

சவால்கள்:- இப்பிரேதேசத்தில் கிடைக்கக் கூடிய வளங்களினைப் பயன்படுத்தி கைத்தொழில் துறையினை முன்னெடுக்கின்ற போது அவை பல சவால்களை எதிர்நோக்கு கின்றன.

**போதிய மூலதனத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமை**

கடன் வழங்குகின்ற நிறுவனங்கள் Hr தனிநபர்கள் சாட்சி Hr அத்தாட்சி ப்படுத்தல்களை வேண்டுவதனாலும் மாதாந்த தவணைக் கொடுப்பனவு செலுத்தப் பணித்தல் காரணமாகவும் மூலதனத்தைப் பெறுவது கடினமாகவுள்ளது.

**உற்பத்திப் பற்றாக்குறை**

போக்குவரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாகவும் கிருமி நாசினிகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்படுவதனால் உயரள விலான உற்பத்தியினைப் பெற முடியா மை.

**தொழில்நுட்பப் பற்றாக்குறை**

இங்கு 90ருமான மக்கள் கிராமப் புறத்தவர்களாக இருப்பதனால் இவர்களிடையே மரபு ரீதியான தொழில்நுட்பங்களினைப் பயன்படுத்தும் தன்மையே காணப்படுகின்றது. இதனால் செலவு மிகவும் குறைவாக இருக்கும் என்பது

இப்பிரதேச மக்களி னது நம்பிக்கையாகக் காணப்ப டுகின்றது. எனவே மரபு ரீதியான தொழில்நுட்ப பாவனை காரணமாக வீரியமான அத்துடன் சிறந்த வெளி யீட்டினைப் பெற முடியாதுள்ளது.

**சிறந்த ஆளணியினைப் பெற முடியாமை.**

வினைத்திறன் படைத்த ஆளணி யினரை வேலைக்கமர்த்த முடியாமை. ஆளணிக்கான கூலித்தொகை அதிகரிப்பு வினைத் திறனான தொழிற் படையின் பற்றாக் குறை என்பன இப்பிரதேசதின் சிறுகைத்தொழில் செயற்பாட்டினைப் பாதித்தது.

**சந்தை வாய்ப்பினைப் பெற முடியாமை**

வெளிமாவட்டங்கள் உற்பத் தியாகி விற்பனைக்கு வரும் பொருட் களினால் இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களிற்கான கேள்வியானது குறைவடைவதுடன் இப்பிரதேச மக்களுடைய நுகர்வும் இப்பொருட்களை மையப்படுத் தியதாக காணப்படாத தன்மையு ள்ளது.

**யுத்த காலங்களில் வளங்கள் அழிக்கப்பட்டமை**

இங்கு சீரான முகாமைத்துவமே Hr சரியான திட்டமிடலோ இன்மை யினால் இப்பிரதேசத்து வளங்கள் அழிக்கப் பட்டதுடன் மீள் நிர்மாணப்படுத்துவதற்கான மூலதனத்தையும் பெறமுடியாத நிலை காணப்படு கின்றது.

**தொழில்நுட்ப அறிவுடைய ஊழியர்கள் பற்றாக்குறை**

யுத்த விளைவுகளினால் பல மூளைசாலிகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களிற்கும் சென்றமை.

ஏனைய பிரதேசத்துப் பொருட்க ளினைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வமாக உள்ளமை.

இப்பிரதேசத்து மக்கள் தமது பிரதேசத்து உற்பத்திகளை விட ஏனைய நாட்டுப் பிரதேச உற்பத்திகளினையே மிகவும் அதிகமாக விரும்புகின்றமை போன்றவற்றை எடுத்துக் கூற முடிகின்றது.

**முடிவுரை**

சிறுகைத்தொழில் துறை வளர்ந்து செல்கின்றபோது அத்துறையுடன் இணைக் கப்பட வேண்டிய உற்பத்திகளுக்கும் அதாவது முன்கொழு, பின்கொழு அடிப்படையில் உற்பத்திகளின் வளர்ச்சி ஏற்படுதல் என்பது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எனவே தற்போதைய அரசியல் பொருளாதார மற்றும் சமூக சூழலை நன்கு கவனத்திற் கொண்டு அரசு நேர்மையான முறையில் தேசிய வளர்ச்சியினை நோக்கியதாக பருநிலைப் பொருளாதார கொள்கை களை வகுத்து அவற்றை நடை முறைப்படுத்துவதுமானால் வன்னிப் பிரதேசத்தினது சிறு கைத்தொழில் துறை மூலம் துரிதமாக்கப்படுவது மட்டுமன்றி அதிகரித்தும் செல்லும். இப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யக் கூடிய சிறுகைத்தொழில் பொருட் களுக்கும் போட்டியாக பிற இடங் களில் இருந்து அல்லது வெளிநாடு களிலிருந்து வரும் பொருட்களுடன் போட்டி போடத்தக்க வகையில் சிறந்த பருநிலைப் பொருளாதாரக் கொள்கை முன்வைக்கப்பட வேண்டும். இதற்கு இப்பிரதேச அரசியல் வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அர்ப் பணிப்புடனான அரசியல் இலாபம் கருதாது

சிறுகைத்தொழில் அபிவிருத் தியினைக் குறிக்கோளாகக் கொண்டு ஒருமித்த தூர நோக்கு சிந்தனையுடன் செயற்பட வேண்டும். அதே நேரம் இப்பிரதேச மக்களாகிய நுகர்வோரும் எதிர்கால நலன்கருதி நிகழ்கால நுகர்வுகளால் சில அர்ப்பணிப்புகளைச் செய்ய முன்வர வேண்டும்.

தொகுத்து நோக்குகின்ற போது. வன்னிப்பிரதேசத்தின் சிறுகைத் தொழில் அபிவிருத்தியினை மேற் கொள்வதற்குப் பொருத்தமாக அதிகளவான வளங்கள் உள்ளன. இந்த வகையில் இங்குள்ள சகல தரப்பினரதும் தூரநோக்கு சிந்தனை, அர்ப்பணிப்பு வெளிப்படைத்தன்மை சிறந்த திட்டமிடல் சரியான அமுல்படுத்தல், நியாயமான கண்காணித்தல் மற்றும் அர்ப்பணிப்புடனான பங்களித்தல் என்பவற்றின் வெற்றியிலும் தான் இப்பிரதேசத்தின் சிறு கைத்தொழில் அபிவிருத்தி தங்கியுள்ளது.

**திரு. எஸ். எஸ். உதயகுமார்**
*தலைவர்*
*பொருளியல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## துணுக்குகள்

1. உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 06
2. ஓசோன் மண்டல பாதுகாப்புச் சர்வதேச தினம் செப்டெம்பர் 16
3. வெள்ளைப்பிரம்பு தினம் ஒக்டோபர் 16
4. உலக பாடசாலை நூலக தினம் ஒக்டோபர் 23
5. உலக நீரிழிவு தினம் நவம்பர் 14
6. உலக எயிட்ஸ் தினம் டிசெம்பர் 01
7. சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் ஒக்டோபர் 17